08.09.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## திண்டுக்கல், தேனியில் மழை:மதுரையில் தூறல்

மதுரை:திண்டுக்கல், தேனியில் சில நாட்களாக மழை பெய்து வருகிறது. மதுரையில் சில இடங்களில் தூறல் மட்டுமே விழுகிறது. இங்கு மழையளவும் பதிவாகவில்லை.

மழையளவு: பெரியாறு அணை 22 மி.மீ., தேக்கடி 01.04, கூடலுார் 04, சண்முகாநதி 06, வீரபாண்டி 10, வைகை 04.06, மஞ்சளாறு 12, மருதாநதி 34, சோத்துப்பாறை 15, கொடைக்கானல் 07.02 என நேற்று முன்தினம் மழையளவு பதிவானது.அணை நீர் வரத்து: பெரியாறு அணைக்கு நீர் வரத்து 700 கன அடி. வெளியேற்றம் 700 கன அடி. வைகை வரத்து 907. வெளியேற்றம் 960. சோத்துப்பாறை வரத்து 15. வெளியேற்றம் 3. மருதாநதி வரத்து 46. வெளியேற்றம் இல்லை. மஞ்சளாறு வரத்து 29. வெளியேற்றம் இல்லை. சண்முகாநதி, சாத்தையாறு அணைகளில் வரத்து, வெளியேற்றம் இல்லை.

## கும்பக்கரையில் கொட்டுது தண்ணீர்



பெரியகுளம்:கனமழையால் பெரியகுளம் அருகே உள்ள கும்பக்கரை அருவியில் தண்ணீர் கொட்டுகிறது. சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். அருவிப்பகுதியின் மேல் நீரோடை பகுதியிருந்து அரைகிலோ மீட்டர் தொலைவில் வழுக்குப்பாறை உள்ளது. இங்கு பாறைகள் ஒழுங்கற்ற முறையில் உள்ளதால் நீந்தி குளிப்பவர்களுக்கும், நீச்சல் தெரியாதவர்களுக்கும் சிக்கல் உள்ளது. இங்கு குளிப்பதற்கு தடை விதித்தும், சுற்றுலா பயணிகள் சிலர் அத்துமீறி குளிப்பது தொடர்கிறது. சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் குளிக்க வேண்டும் என வனத்துறையினர் எச்சரித்துள்ளனர்.--

**பெரிய வெங்காயம் உற்பத்திக்கு முக்கியத்துவம்:மகாராஷ்டிரா செல்கிறது தமிழக அதிகாரிகள் குழு**

பெரிய வெங்காயம் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் பெற, தமிழக அதிகாரிகள் குழு, மகாராஷ்டிர மாநிலம் செல்ல உள்ளது.

நம் நாட்டில், பெரிய வெங்காயம் உற்பத்தியில், தமிழகத்தின் பங்கு மிகவும் குறைவு. அதே நேரத்தில், பெரிய வெங்காயத்தின் தேவை அதிகம். மத்திய வேளாண் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில், 'தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம்' என்ற அமைப்பு செயல்படுகிறது.இந்நிறுவனம், பெரிய வெங்காயம், பூண்டு, உருளை கிழங்கு உள்ளிட்ட தோட்டப் பயிர்களுக்கு தேவையான விதைகளை, விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்கிறது. மேலும், காய்கறி உற்பத்தியை அதிகரிக்க தேவையான, தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது.

தமிழகத்தின், பெரிய வெங்காயம் தேவையை பூர்த்தி செய்வதில், மகாராஷ்டிரா, கர்நாடக மாநிலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தற்போது, நாடு தழுவிய அளவில், வெங்காயம் வரத்து குறைந்துள்ளதால்,

தமிழகத்தில், ஒரு கிலோ சராசரியாக, 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதையடுத்து, பெரிய வெங்காயம் உற்பத்தியை அதிகரிக்க, தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து, உணவு மற்றும் கூட்டுறவு துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தமிழகத்தில், திண்டுக்கல், சேலம், ஈரோடு மற்றும் மதுரை மாவட்டங்களில், அதிகளவில் சிறிய வெங்காயமும்; நெல்லை மாவட்டம் சுரண்டை; திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில், குறைந்த அளவில் பெரிய வெங்காயமும் உற்பத்தியாகிறது.பெரிய வெங்காயம் உற்பத்திக்கு அதிக வாய்ப்பு இருந்தும், தொழில்நுட்ப அறிவு குறைவாக உள்ளது. எனவே, தேசிய தோட்டக்கலை அமைப்புடன் இணைந்து, வெங்காயம் உற்பத்தியை அதிகரிக்க, அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான ஆலோசனை பெற கூட்டுறவு, வேளாண் துறை அதிகாரிகள் குழுவினர், இம்மாதம் இறுதியில், மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் உள்ள, தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு செல்ல உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.- நமது நிருபர் -

## ராமநாதபுரத்தில் 1,755 பண்ணை குட்டைகள்ரூபாய் 9 கோடியில் ஆழப்படுத்த ஏற்பாடு

ராமநாதபுரம் மாவட்டத்தில், 1,755 பண்ணை குட்டைகள், ஒன்பது கோடி ரூபாய் செலவில், நூறு நாள் வேலை திட்டத்தின் கீழ் ஆழப்படுத்தப்பட உள்ளன.கடந்த, 2012ல் நடந்த மாவட்ட கலெக்டர்கள் மாநாட்டில், 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பண்ணை குட்டைகள், இரண்டு மீட்டர் வரை ஆழப்படுத்தப்படும்' என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.கடந்த, 2013 - -14ல், 311 பண்ணை குட்டைகள், ஒரு கோடி

ரூபாய் செலவிலும், 2014 - -15ல், 973 பண்ணை குட்டைகள், ஐந்து கோடி ரூபாய் செலவிலும் ஆழப்படுத்தப்பட்டன. இவை, விவசாயிகளின் பாசன தேவையை பூர்த்தி செய்து வருகின்றன.இதையடுத்து, நடப்பு நிதியாண்டில், 1,755 பண்ணை குட்டைகளை, ஒன்பது கோடி ரூபாய் செலவில் ஆழப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. வேளாண்துறையின் அங்கமான வேளாண் பொறியியல் துறை மூலம், இதற்கான பணி மேற்கொள்ளப்படும்.

இதுகுறித்து வேளாண்பொறியியல் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

பண்ணை குட்டைகளில் தேக்கி வைக்கப்படும் தண்ணீர் மூலம், பயறு வகைகள், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்ய முடியும்; பருவமழைக்கு பிறகு நிலத்தடி நீர் மட்டம் வேகமாக உயரும். இவ்வாறு அவர் கூறினார்.-

**மழை பெய்யலாம் குடையுடன் போங்க!**

சென்னை:சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:

வெப்பச் சலனத்தால், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலுார், திருவண்ணாமலை மாவட்டங்களில், இன்று கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையில், மாலை அல்லது இரவு நேரத்தில், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம். பொதுவாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களிலும், தென் மாவட்டங்களில், ஒரு சில இடங்களிலும் மழை பெய்யலாம். இவ்வாறு அவர் கூறினார்.கடந்த, 24 மணி நேரத்தில், தேனி, பெரியகுளத்தில், அதிகபட்சமாக, 8 செ.மீ., மழை பெய்துள்ளது.

### கோழிக்கறி, மீன் விலை சரிவு:விரத நாட்களால் மேலும் குறையும்

தமிழகத்தில், கோழி இறைச்சி, மீன் விலை வெகுவாக சரிந்துள்ளது, அசைவ பிரியர்களை மகிழ்ச்சியடைய வைத்துள்ளது. தொடர் விரத நாட்களாலும், புரட்டாசி மாதம் துவங்குவதாலும், விலை மேலும் குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.தமிழகத்தில், ஆட்டிறைச்சி கிலோ, 500 முதல் 550 ரூபாய் வரை விற்கப்படுகிறது; இதனால், அசைவ பிரியர்கள், கோழி இறைச்சி, மீன்களை அதிகம் விரும்புகின்றனர். தற்போது, இவை இரண்டின் விலையும் பெருமளவு சரிந்துள்ளது.கறிக்கோழி, உடுமலைப்பேட்டை, பல்லடம், நாமக்கல், சேலம், ஈரோடு, கோவை மற்றும் திருப்பூரில் இருந்து, மாநிலம் முழுவதும் விற்பனைக்கு செல்கிறது. வார நாட்களில், ஐந்து லட்சம்; ஞாயிறு, விஷேச நாட்களில், 10 லட்சம் கோழிகளும் விற்பனைக்கு வரும்.

விலை சரிவு:தற்போது இதன் எண்ணிக்கை, வார நாட்களில், ஏழு லட்சம்; விடுமுறை நாட்களில், 15 லட்சமாகவும் உயர்ந்துள்ளது; இதனால், கோழி இறைச்சி விலை சரிந்துள்ளது. கடந்த மாதம், 140 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ கோழிக்கறி, தற்போது, 110 ரூபாயாக குறைந்துள்ளது. சில இடங்களில், 100 ரூபாய்க்கும் கிடைக்கிறது.

சேலம் கறிக்கோழி உற்பத்தியாளர் குமரேசன் கூறுகையில், "ஓணம் பண்டிகைக்கு கேரளா அனுப்ப, தமிழக கோழி பண்ணையாளர்கள், அதிக கோழியை உற்பத்தி செய்தனர்; அங்கு, எதிர்பார்த்த விற்பனை நடக்கவில்லை. நஷ்டத்தில் இருந்து தப்ப, அதிக கோழிகளை விற்க அனுப்புவதால், விலை குறைந்துள்ளது; மேலும், விலை குறையும்," என்றார்.

இதேபோல், மீன்களின் விலையும் கணிசமாக குறைந்துள்ளது. சென்னை காசிமேடு மீனவர்கள் கூறுகையில், 'தமிழகத்தில், அதிகளவில் மீன்கள் கிடைக்கின்றன. வெளிமாநில மீன்வரத்தும் அதிகமாக உள்ளதால், விலை குறைந்துள்ளது. பண்டிகை காலம் துவங்குவதால், மேலும் விலை குறையும்' என்றனர். இந்த விலை குறைவு, அசைவ பிரியர்களை மகிழ்ச்சியடைய வைத்துள்ளது.

அடுத்தடுத்து விழா:வரும், செப்., 17ல் விநாயகர் சதுர்த்தி; அக்., 13ல், நவராத்திரி; அக்., 21ல் சரஸ்வதி பூஜையும் வருகின்றன. செப்., 18ல், புரட்டாசி மாதம் துவங்குகிறது; இந்த காலத்தில், பெருமளவு அசைவ பிரியர்கள், சைவத்திற்கு மாறுவர் என்பதால், சிக்கன், மீன் விலை மேலும் குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.- நமது நிருபர் -

**தமிழகத்தில் பிராய்லர் கறிக்கோழி விலை சரிவு: வரத்து அதிகரிப்பு; வரிசை கட்டும் பண்டிகை எதிரொலி**

சேலம்: புரட்டாசி மாதத்தை தொடர்ந்து பண்டிகைகள் வரிசை கட்டும் நிலையில், கறிக்கோழியின் வரத்து அதிகரித்துள்ளதால், விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில், விலையில் மேலும் சரிவு ஏற்படும் என, தகவல்கள் பரவி வருவது, கறிக்கோழி உற்பத்தியாளர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கு, உடுமலைப்பேட்டை, பல்லடம், நாமக்கல், சேலம், ஈரோடு, கோவை, திருப்பூர் ஆகிய இடங்களில் இருந்து கறிக்கோழி விற்பனைக்கு வருகிறது. கடந்த மாதம் வரை, இவற்றின் வரத்து வார நாளில், ஐந்து லட்சம் கோழிகளும், ஞாயிறு உள்ளிட்ட

விசேஷ நாளில், 10 லட்சம் கோழிகள் வரை, விற்பனைக்கு வந்தது. இந்த வரத்து தற்போது வார நாளில், ஏழு லட்சமாகவும், ஞாயிற்றுக் கிழமைகளில், 15 லட்சமாக அதிகரித்துள்ளது. செப்.,5ல் கிருஷ்ணஜெயந்தி கொண்டாடப்பட்ட நிலையில், செப்.,18ல் புரட்டாசி மாதம் துவங்குகிறது. அதற்கு முன்பாக செப்.,17ல் விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. அதை தொடர்ந்து அக்.,13ல் நவராத்திரி துவங்கி, அக்.,21ல் சரஸ்வதி பூஜை வருகிறது. தொடர்ந்து பண்டிகை நாள் வருவதால், அசைவ பிரியர்கள் சைவத்துக்கு மாறும் சூழல் உருவாகி உள்ளது. புரட்டாசி மாதம் செப்.,18ல் துவங்குவதால், அசைவ பிரியர்களின் எண்ணிக்கையில், கடும் சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதை கருத்தில் கொண்டு, கோழிப்பண்ணையாளர்கள் மார்க்கெட்டுக்கு அதிக அளவில் கறிக்கோழிகளை விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர். மார்க்கெட்டில் விற்பனையை விட, வரத்து அதிகமாக இருப்பதால், கறிக்கோழியின் விலை, கடந்த மாதத்தை விட கிலோவுக்கு, 20 ரூபாய் முதல், 50 ரூபாய் வரை, சரிவு ஏற்பட்டுள்ளது.

கறிக்கோழி விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது, பண்ணையாளர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதே நேரத்தில் தொடர்ந்து பண்டிகைகள் வரிசை கட்டுவதால், கறிக்கோழியின் விலை கிலோ, 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்கின்றனர்.

சேலம் தாதகாப்பட்டியை சேர்ந்த கறிக்கோழி வியாபாரி குமரேசன் கூறியதாவது: கேரளாவில் கடந்த மாதம் கொண்டாடப்பட்ட, ஓணம் பண்டிகைக்காக, தமிழக கறிக்கோழி பண்ணையாளர்கள் அதிக அளவில் கோழியை உற்பத்தி செய்தனர். கேரளாவில் எதிர்பார்த்த அளவு விற்பனை இல்லாததால், நஷ்டத்தில் இருந்து தப்பிக்கும் வகையில், கோழிகள் அதிக அளவில், தமிழக நகரங்களுக்கு விற்பனைக்கு வருகிறது. அதே நேரத்தில் விற்பனை எதிர்பார்த்த அளவு இல்லாததால், கடந்த சில

நாட்களாக, விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த சரிவு மேலும் அதிகரித்து கிலோ, 60 ரூபாய்க்கு விற்பனை செய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## பருவ மழை தவறியதால் கரும்பு சாகுபடி பாதிப்பு: மழையை எதிர்பார்த்து காத்திருக்கும் விவசாயிகள்

தர்மபுரி: போதிய பருவமழை இல்லாமல், கரும்பு கருகி வந்த நிலையில், நேற்று முன்தினம் பெய்தது போல், மழை தொடருமா என, விவசாயிகள், மழையை எதிர்பார்த்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், நெல், மஞ்சள், பருத்தி, மரவள்ளி கிழங்கு, தக்காளி, கேழ்வரகு, சாமை உள்ளிட்ட பயிர்களுடன், கரும்பு முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டத்தில், பாலக்கோடு, பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய தாலுகாக்களில், கரும்பு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன், மாவட்டத்தில் கரும்பு, 15 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. சில ஆண்டுகளாக போதிய பருவமழை இல்லாததால், கரும்பு சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், கரும்பு சாகுபடி செய்திருந்த, பல விவசாயிகள், மாற்று பயிருக்கு மாறினர். இதனால், கடந்த சில ஆண்டுகளாக, மாவட்டத்தில், கரும்பு சாகுபடி பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. இந்நிலையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், நேற்று முன்தினம், பலத்த மழை பெய்தது. இதே போன்று, மழை தொடர்ந்தால், அழிவை நோக்கி சென்ற கரும்பு பயிர்கள் மீண்டும், உயிர் பிடித்து, சாகுபடி அதிகரிக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து, தர்மபுரியை அடுத்த புலிக்கரையை சேர்ந்த விவசாயி குமரன் கூறியதாவது: கடந்த சில ஆண்டுகளாக, தென்மேற்கு மற்றும் வட கிழக்கு பருவமழை தொடர்ந்து பொய்த்து வருகிறது. இதனால், கரும்பு சாகுபடி செய்திருந்த பல விவசாயிகள், மாற்று பயிர் சாகுபடிக்கு சென்றதால், தற்போது மாவட்டத்தில், 10 ஆயிரம் ஹெக்டேர் அளவில் தான் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தாண்டு, கோடையில் குறிப்பிட்ட அளவு மழை பெய்ததால், தென்மேற்கு பருவமழை கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில் ஏராளமான விவசாயிகள், கரும்பு சாகுபடியில் ஈடுபட்டனர். ஆனால், தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், நிலத்தடி நீர் மட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக, விவசாயிகள் கரும்பு பயிருக்கு போதிய பாசன வசதி செய்து தர முடியாததால், கடந்த சில நாட்களாக, கரும்பு பயிர் கருகி வந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் பெய்த கன மழை மகிழ்ச்சி அளித்தது. கரும்பு நன்கு வளர, மேலும், தொடர் மழையை எதிர்பார்த்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**தேங்காய் சிரட்டையில் கார்பன் மூலப்பொருள் தயாரிப்பு: தேவை அதிகரிப்பால் சிரட்டை வாங்குவது அதிகரிப்பு**

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம், புகழூர், தோட்டக்குறிச்சி, நொய்யல் வேட்டமங்கலம், குந்தானிபாளையம், மரவாபாளையம், கவுண்டன்புதூர், ஓலப்பாளையம், திடுக்காடு துறை, ஓரம்புப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.

தென்னை மரத்தில் உள்ள அனைத்து பகுதிகளும் பயனுள்ளதாக இருக்கிறது. தென்னை மட்டைகள் கீற்று பின்னுவதற்கும், குச்சிகள் வீடு கட்டுமானத்துக்கு பயன்படுகிறது. தேங்காய், வீட்டு உபயோகம் மற்றும் எண்ணெ தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. விவசாயிகள் தேங்காய்

பறித்து அதன் பருப்புகளை தனியாக எடுத்து காயவைத்து விற்கின்றனர். மேலும், தேய்காய் மட்டைகளை மிசின் மூலம் தட்டி எடுத்து கயிறுகள் மற்றும் வாகன சீட்டுகள் தயாரிக்கவும், ஹோட்டல்களுக்கு அடுப்பு எரிக்கவும் பயன்படுகின்றன. தேங்காய் சிரட்டை, மரக்கரியை மூலப்பொருளாகப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் கார்பன் தொழிற்சாலைகளால், இந்தியாவுக்கு அன்னிய செலாவணி அதிகரித்து வருகிறது. தேங்காய் சிரட்டையை எரித்து அதிலிருந்து கிடைக்கும் கரியைப் பயன்படுத்தி "ஆக்டிவேட்டட் கார்பன்' என்ற பொருள் தயாரிக்கப்படுகிறது. குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், தங்கம் பிரித்தெடுத்தல், அழகுசாதன பொருள்கள், மருந்துகள் போன்றவற்றில் "ஆக்டிவேட்டட் கார்பன்' பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவிலிருந்து ஆண்டுதோறும் 900 கோடி ரூபாய்க்கு "ஆக்டிவேட்டட் கார்பன் 'ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் மூலம் அன்னிய செலாவணி அதிகம் கிடைக்கிறது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் "ஆக்டிவேட்டட் கார்பனில்' 80 சதவீதம் தமிழகத்தில் தயாரிக்கப்படுகிறது. கர்நாடகம், தமிழகத்தின் காங்கேயம் பகுதிகளிலிருந்து தேங்காய் சிரட்டை கரி மூலப்பொருளாக பெறப்படுகிறது. இதுதவிர பிலிப்பின்ஸ், மலேசியா, இலங்கை, தாய்லாந்து நாடுகளிலிருந்தும் தேங்காய் சிரட்டை கரி இறக்குமதி செய்யப்படுகிறது. தேங்காய் சிரட்டைகளை மொத்தமாக சேகரித்து அதன் மூலம் வருவாயைப் பெருக்க முடியும். 10 ஆண்டுகளுக்கு முன்பு கிலோ 60 பைசாவாக இருந்த தேங்காய் சிரட்டை , தற்போது கிலோ ஒன்பது ரூபாயாக அதிகரித்துள்ளது. இதைக் கொள்முதல் செய்து, எரித்துக் கரியாக்கி தேங்காய் சிரட்டை கரி கிலோ 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

கரூர் மாவட்டம் நொய்யல் நடைனூர் பகுதிகளில் தேங்காய் பருப்பு மற்றும் தேங்காய் சிரட்டைகளை விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் மொத்தமாக வாங்கி லாரி மற்றும் வேன்களிள் ஏற்றி செல்கின்றனர். இங்கு ,கிலோ ஐந்து ரூபாய் முதல் ஆறு ரூபாய் வரை சிரட்டைகளை பொருத்து வாங்கப்பட்டு, காங்கேயம், வெளிமாவட்டங்கள், வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பெண்கள் தங்களின் வீடுகளில் பயன்படுத்தும் தேங்காய் சிரட்டையை அதிக அளவில் குப்பைகளில் போடாமல் சேகரித்து விற்று வருகின்றனர்.

## தாண்டிக்குடியில் தொடர்மழை

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மலைக்கிராமங்களில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. நேற்று பகல் 12 மணிக்கு துவங்கிய மழை, இடைவிடாது மிதமான வகையில் பெய்து கொண்டே இருந்தது. அடை மழை காரணமாக விவசாயப்பணி சென்ற கூலியாட்கள் வீடு திரும்பினர். இதனால் இயல்பு வாழ்க்கை முடங்கியது. தற்போதைய தொடர்மழை மலை விவசாயப்பயிர்களுக்கு ஏற்றதாக அமைந்துள்ள நிலையில் விவசாயிகள் புதிய நாற்றுக்கள் நடும் பணியை துவக்கியுள்ளனர். குறுவிவசாயத்தை பொறுத்தமட்டில் தொடர்மழை பாதிப்பை ஏற்படுத்தும் என்கின்றனர் விவசாயிகள். வெயிலின் தாக்கம் குறைந்து காற்றில் ஈரப்பதம் அதிகரித்து குளிர் நிலவுகிறது.

## முருங்கை விலை உயர்வு தக்காளி விலை குறைவு

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வெண்டை, முருங்கைக்காய் விலை உயர்ந்தும், தக்காளி விலை குறைந்தும் காணப்பட்டது.ஒட்டன்சத்திரம், தாராபுரம், மூலனூர், மார்க்கம்பட்டி, அரவக்குறிச்சி மற்றும் சுற்றி அதனைச் சுற்றி உள்ள கிராமப் பகுதிகளில் முருங்கைகாய் அதிகமாக பயிரிடப்படுகிறது. கரும்பு, செடி, மரம் முருங்கை வகைகள் இருந்த போதிலும், செடி முருங்கையே அதிகமாக

பயிரிடப்படுகிறது. கடந்த சில நாட்களாக செடி முருங்கை கிலோ ரூ.5க்கு விற்றது. ஆனால் இந்த வாரம் இதன் விலை படிப்படியாக உயர்ந்து நேற்று ரூ.9 க்கு விற்றது.இதேபோல் ஓணத்திற்கு பிறகு வெண்டைக்காய் கிலோ ரூ.5க்கு விற்றது. ஆனால் நேற்று ரூ.10 க்கு விற்றது. தக்காளி விலை தொடர்ந்து சரிவு நிலையிலேயே காணப்படுகிறது. நேற்று ஒரு கிலோ தக்காளி ரூ.2 லிருந்து ரூ.3 வரை விற்றது. முருங்கை, வெண்டை வரத்து இனி வரும் நாட்களில் குறையும் பட்சத்தில், இவற்றின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

### வறண்ட பூமியில் வளமான சாகுபடி

தேவதானப்பட்டி:பெரியகுளம் அருகே ரெங்கநாதபுரத்தை சேர்ந்த விவசாயி பிரபு ஆழ்துளைக்கிணற்றில் கிடைக்கும் குறைந்த அளவு நீரை தரையில் தேக்கி வைத்து கரும்பு, வாழை, மக்காச்சோளம் சாகுபடி செய்து வருகிறார். பெரியகுளம் தாலுகா, அ.வாடிப்பட்டி, அ.புதூர், வெங்கட்ராமபுரம், வேலாயுதபுரம், இந்திராகாலனி, ரெங்கநாதபுரம் ஆகிய கிராமங்களில் விவசாயம் முக்கியத் தொழிலாக உள்ளது. இப்பகுதி விவசாயிகள் கரும்பு, மக்காச்சோளம், வாழை சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இக்கிராமங்கள் வறட்சிப் பகுதியாக உள்ளது. இதனால் மானாவாரி நிலங்கள் அதிக அளவில் உள்ளன. கிணறுகள் வறண்டுள்ள நிலையில் ஆழ்துளைக் கிணறுகளை அமைத்துள்ளனர். 700 அடி முதல் 900 அடிவரை போர் அமைத்தும் நீர் கிடைக்கவில்லை. சில இடங்களில் கிடைக்கின்ற குறைந்த அளவு நீரை கொண்டு விவசாயப்பணிகள் நடந்து வருகிறது.

ரெங்கநாதபுரத்தை சேர்ந்த விவசாயி பிரபுக்கு சொந்தமாக 4 ஏக்கர் நிலம் உள்ளது. இங்குள்ள கிணற்றில் நீர்வற்றிவிட்டது. இதனால் போர்வெல் அமைத்தார். அதில் குறைந்த அளவு நீர் கிடைத்தது. குறைந்த அளவு நீரைக் கொண்டு விவசாயம் செய்ய முடியாது என்பதால் போர் வெல்லில் கிடைக்கும் நீரை தரையில் தேக்கி வைத்து விவசாயம் செய்வதற்காக

முன்பு 40 அடி நீளம் 15 அடி அகலத்தில் தரையில் தொட்டி கட்டினார். இரவு முழுதும் போர்வெல்லில் மின் மோட்டார் மூலம் நீரை உறிஞ்சி தொட்டியில் நிரப்பினார். இதன் மூலம் தொடர்ந்து வாழை, மக்காச்சோளம், கரும்பு சாகுபடியில் ஈடுபட்டு சாதனை படைத்து வருகிறார்.

விவசாயி எஸ்.பிரபு கூறியதாவது: வறட்சி பகுதி என்பதால் நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இரவு முழுவதும் தொட்டியில் நீர் நிரம்பும் அந்த நீரை 5 இஞ்ச் பைப் மூலம் வெளியேற்றினால் 2 மணி நேரம் பாய்ச்ச முடியும். இதே போன்று பகல் முழுவதும் தொட்டியில் நீரை நிரப்பி மாலையில் நீரை பாய்ச்சுகிறோம். இவ்வாறு சுழற்றி முறையில் எட்டு நாட்கள் முதல் பத்து நாட்களுக்கு ஒரு முறை கரும்பு வயலுக்கு நீர் பாய்ச்சி வருகிறேன், என்றார்.

**பருவமழை துவங்கியதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு: விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி**

தேனி:தேனி மாவட்டத்தில் தொடரும் பருவமழையால் அணைகளில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் விவசாய தேவை மற்றும் குடிநீர் பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் நிலை உள்ளது. தேனி மாவட்டத்தில் செப்டம்பர் 3 முதல் பருவமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாவட்டத்தில் பெய்த மழையளவு விபரம் (மி.மீ):ஆண்டிபட்டி- 4.2, அரண்மனைப்புதூர்-2.4, போடி -24, கூடலூர் -3, மஞ்சளாறு 12, பெரியகுளம் -77, பெரியாறு -22, சோத்துப்பாறை -15, தேக்கடி 1.4, வைகை அணை 4.6, வீரபாண்டி -10 மி.மீ.,மழை பதிவாகியது. மாவட்டத்தில் மொத்தம் 175.6 மி.மீ., மழை பதிவாகியது.

மாவட்டத்தில் மொத்த மழையளவாக செப்டம்பர் 3 ல் 45.8 மி.மீ., 4 ல் 159.36 மி.மீ., 5 ல் 165 மி.மீ. மழை பெய்துள்ளது. தொடர்ந்து மழை

பெய்துவருவதால் அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. பெரியாறு அணை நீர் மட்டம் 117.70 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 703 கன அடியாகவும், வெளியேற்றம் 700 கன அடியாகவும் உள்ளது. வைகை அணையின் நீர்மட்டம் 44 அடியாக உயர்ந்துள்ளது (மொத்தம் 71). அணைக்கு நீர் வரத்து 907 கனஅடியாகவும், 960 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

மஞ்சளார் அணையின் நீர்மட்டம் 47.8 அடியாக உள்ளது(மொத்தம் 57). அணைக்கு 29 கன அடியாக உள்ளது. அணையிலிருந்து நீர் வெளியேற்றம் இல்லை.

தேனி மாவட்ட சுற்றுலா பகுதியான ஹைவேவிஸ் மலையில் ஹைவேவிஸ், மணலாறு,வெள்ளியாறு, தூவானம், இரவங்கலார் ஆகிய ஐந்து சிறிய அணைகள் உள்ளன. தென்மேற்கு பருவமழை துவங்கியதால் ஹைவேவிஸ் மலையில் தொடர்ந்து சாரல் மழை பெய்து வருகிறது. இதனால் வறண்டு கிடந்த அணைகளுக்கு நீர் வரத்து தொடங்கி உள்ளது. ஹைவேவிஸ் அணைகளில் நிரம்பி வழியும் நீரானது அங்கிருந்து சுருளி அருவியை வந்தடையும் வகையில் மலையை குடைந்து ஆங்கிலேயர் ஆட்சியில் சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது அணைகள் நிரம்பி வருவதால், சுரங்கப்பாதை வழியாக வரும் நீர் சுருளி அருவியில் கொட்டுகிறது. இதனால் ஹைவேவிஸ் மலைக்கும், சுருளி அருவிக்கும் சுற்றுலா பயணிகள் வரத்து அதிகரித்துள்ளது.

**உரிய நேரத்தில் பெய்த மழை: 5,000 ஏக்கர் கடலை தப்பின**

சிங்கம்புணரி: சிங்கம்புணரி ஒன்றியத்தில் கடந்த சில நாட்களாக பெய்த மழையினால், 5 ஆயிரம் ஏக்கரில் நடவு செய்திருந்த நிலக்கடலை பயிர் கருகாமல் தப்பியது.

சிங்கம்புணரி ஒன்றிய அளவில் மானாவாரியாக நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது. ஆடி பட்டத்தில் பிரான்மலை, ஒடுவன்பட்டி,மேலப்பட்டி, கல்லம்பட்டி ஆகிய கிராமங்களில்

விவசாயிகள் நிலக்கடலை விதை நடவு செய்தனர். இந்த பயிரும் பூக்கும் தருணத்தில் மழையின்றி காயும் நிலைக்கு சென்றது. ஆனால், மழை கைகொடுத்ததால் 5 ஆயிரம் ஏக்கர் நிலக்கடலை தப்பியது. இதனால், ஏக்கருக்கு

உழவுக்கூலி, விதை, களை எடுப்பு கூலி ரூ.10 ஆயிரம் வீணாகிவிடுமோ என அஞ்சிய விவசாயிகள் தப்பினர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் பலத்த மழை பெய்யும்**

வெப்பசலனம் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் பலத்த மழை பெய்யும் வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் திங்கள்கிழமை கூறியதாவது:

வெப்பசலனம் காரணமாக, கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பதிவாகியது. தேனி மாவட்டம் பெரியகுளத்தில் அதிகபட்சமாக 80 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

அதற்கு அடுத்தபடியாக, திருப்பூர் மாவட்டம் முளனூர், சேலம் மாவட்டம் ஏற்காட்டில் 70 மி,மீ, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை, திண்டுக்கல் மாவட்டம் சத்திரப்பட்டியில் 60 மி,மீ, கிருஷ்ணகிரி மாவட்டம் பெனுகொண்டபுரத்தில் 50 மி.மீ, நீலகிரி மாவட்டம் தேவலா, கரூர்

மாவட்டம் அரவக்குறிச்சி, வேலூர் மாவட்டம் குடியாத்தம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் 40 மி.மீட்டர் மழை பதிவாகியது.

பலத்த மழை:

வெப்பசலனம் தொடர்ந்து நீடிப்பதால், அடுத்த 24 மணி நேரத்தில் வட மாவட்டங்களில் அனேக இடங்களிலும், தென் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

அதே நேரத்தில் வட உள் மாவட்டங்களைப் பொருத்தவரை, கிருஷ்ணகிரி, தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் ஓரிரு இடங்களில் பலத்த மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரியாக இருக்கும் என எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

தமிழகம், புதுச்சேரி கடலோரப் பகுதிகளில், தென் மேற்கு திசையில் இருந்து 45 முதல் 55 கி.மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும் வாய்ப்புள்ளது என்றும் அவர் கூறினார்.

## கொடைக்கானலில் தொடர்ந்து மழை ஏரியின் நீர்மட்டம் உயர்வு

கொடைக்கானலில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது இந்த மழையால் கொடைக்கானல் அப்சர்வேட்டரி பகுதிகளிலுள்ள குடிநீர்த்தேக்கம் மற்றும் மனோ ரஞ்சித அனையின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது இந் நிலையில் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள ஏரியின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கொடைக்கானல் பகுதிகளிலுள்ள பியர்சோழா அருவி,பாம்பார் அருவி,பேரிபால்ஸ் அருவி,செண்பகா அருவி,வெள்ளி நீர் வீழ்ச்சியிலும் தொடர்ந்து தண்ணீர் வரத்து அதிகரித்து

வருகிறது.தொடர்ந்து பெய்து வரும் மழையால் மலைச் சாலைகளில் ஆங்காங்கே சிறு,சிறு மரக்கிளைகள் விழுந்தும்,லேசான மண் அரிப்புகளும் ஏற்பட்டுள்ளது.

பல இடங்களில் சாலைகளில் தண்ணீர் தேங்கியிருப்பதாலும்,மழைத் தண்ணீர் செல்வதற்கு வழியில்லாததாலும் சாலைகளும்,தடுப்புச் சுவர்களும் பாதிப்படைந்து வருகிறது எனவே மழைக் காலங்களில் மழைத் தண்ணீர் செல்வதற்கு மலைச் சாலைகளில் வாய்க்கால்கள் எடுப்பதற்கு நெடுஞ்சாலைத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது சமூக ஆர்வலர்களி0ன் கோரிக்கையாகும்.

## நெல் இயந்திர நடவு: மானியம் பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்

நடவு இயந்திரம் மூலம் நெல் நடவுப் பணிகளை மேற்கொள்ளும் விவசாயிகள் அரசு மானியம் பெற விண்ணப்பிக்கலாம் என்று, சித்தாமூர் வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கிட சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சித்தாமூர் வட்டாரப் பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் நடவு இயந்திரம் மூலமே நெல் நாற்று நடவுகின்றனர். இதற்காக நடவு இயந்திரத்தை வாடகைக்கு அமர்த்தி நடவு செய்கின்றனர்.

இதனால், நடவுச் செலவாக விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டர் (2.5 ஏக்கர்) வரை அரசு மானியமாக ரூ. 3 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

இந்த மானியத்தைப் பெற விவசாயிகள் தங்களது நிலத்தில் இந்திரத்தைக் கொண்டு நடவு செய்ததைப் புகைப்படம் எடுத்து, அரசு வழங்கிய அடையாள அட்டை, தொலைபேசி எண், வங்கி கணக்கு எண் போன்ற அனைத்து விவரங்களையும் அதற்கான விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து அளிக்க வேண்டும்.

பின்னர் அதிகாரிகளின் பரிந்துரையின்பேரில் மானியத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொடைக்கானலில் தொடர்ந்து மழை: ஏரியின் நீர்மட்டம் உயர்வு

கொடைக்கானலில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

கொடைக்கானலில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழையால் கொடைக்கானல் அப்சர்வேட்டரி பகுதிகளிலுள்ள குடிநீர்த்தேக்கம் மற்றும் மனோ ரஞ்சித அணை ஆகியவற்றின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. இந் நிலையில் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள ஏரியின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது

இதனைத் தொடர்ந்து கொடைக்கானல் பகுதிகளிலுள்ள பியர்சோழா அருவி, பாம்பார் அருவி, பேரிபால்ஸ் அருவி, செண்பகா அருவி, வெள்ளி நீர் வீழ்ச்சியிலும் தொடர்ந்து தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் சாலைகளில் ஆங்காங்கே மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. லேசான மண் அரிப்புகளும் ஏற்பட்டுள்ளன.

## செப்.25-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை மாவட்ட மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் செப். 25 ஆம் தேதி காலை 11 மணிக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ச.மலர்விழி தலைமையில் நடைபெற உள்ளது.

மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்களும் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து பயனடையலாம் என மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்புவனம் பகுதியில் பலத்த மழை

திருப்புவனம், திருப்பாச்சேத்தி, பூவந்தி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் திங்கள்கிழமை மாலை பலத்த மழை பெய்தது.

திருப்புவனம் பகுதியில் திங்கள்கிழமை பகல் முழுவதும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் மாலை 4 மணியளவில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## ஈரோடு மாவட்டத்தில் தொடரும் மழை

ஈரோடு மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக கனமழை பெய்து வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் பொதுமக்கள், வாகன ஓட்டிகள் பெரும் அவதிக்குள்ளாகினர். பொதுமக்களின் கஷ்டத்தை தணிக்கும் வகையில் சனிக்கிழமை மாலை கனமழை பெய்தது. தொடர்ந்து இரவு நேரங்களிலும் ஈரோடு மாவட்டத்தின் பல பகுதிகளில் லேசான மழைச்சாரல் விழுந்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இதனால் பல மாதங்களுக்கு பின் ஈரோடு மாவட்டமே குளிர்ந்து காணப்பட்டது. பொதுமக்களின் மகிழ்ச்சியை நீடிக்கும் வகையில் மறுநாளும் பல்வேறு பகுதிகளில் மழை பெய்ததால், ஈரோடு மாவட்டத்தில் நீர் ஆதாரங்கள் நிரம்பி வருகின்றன.

ஈரோடு மாவட்ட வனப்பகுதிகளான ஆசனூர், தாளவாடி உள்ளிட்ட பகுதிகளிலும் கனமழை பெய்ததால் வன விலங்குகள் குடிப்பதற்காக வனத்துறையினர் கட்டிய தண்ணீர் தொட்டிகளும், கசிவுநீர் குட்டைகளும் நிரம்பின. வனப்பகுதிகள் வறட்சி நீங்கி பசுமையாக காணப்படுவதால்

சில மாதங்களுக்கு வன உயிர்களின் உணவு பற்றாக்குறை தீர்ந்ததாக வனத்துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை பதிவான மழை விவரம் (மி.மீட்டரில்):

சிவகிரியில் 25, சென்னிமலையில் 20, பவானியில் 6.4, மொடக்குறிச்சியில் 6, கவுந்தப்பாடியில் 6, கோபியில் 4.3, ஈரோடு 2, பெருந்துறையில் 1, முத்தூரில் 14, என்ற அளவில் மழை பதிவானது. தொடர்ந்து மழை நீடித்து வருவதால் பொதுமக்களும் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வேளாண்மைக்கு 5 ஆண்டுகளில் ரூ.24,000 கோடி ஒதுக்கீடு

தமிழகத்தில் வேளாண்மைக்கு 5 ஆண்டுகளில் ரூ. 24,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம்.

தஞ்சாவூர் அருகே மறியல் கிராமத்தில் அதிமுக சார்பில் அண்மையில் பொதுக் கூட்டத்தில் அவர் பேசியது:

கடந்த 2011-ம் ஆண்டு ஒரு லட்சம் பேருக்கும், 2012-ம் ஆண்டு 1.25 லட்சம் பேருக்கும், 2013-ம் ஆண்டு 2.10 லட்சம் பேருக்கும், 2014-ம் ஆண்டு 3.25 லட்சம் பேருக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது. நிகழாண்டு 3 லட்சம் பேருக்கு பட்டா வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 40,000 ஏழைகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பசுமை வீடுகள், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் மூலமும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 5 ஆண்டுகளில் கல்விக்கு மட்டும் தமிழக முதல்வர் ஒரு லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கி உள்ளார். தமிழக முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் 1,143 நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விவசாயத்துக்கு 5 ஆண்டுகளில் ரூ. 24,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் வைத்திலிங்கம்.

அதிமுக தஞ்சாவூர் தொகுதிச் செயலர் துரை. திருஞானம் தலைமை வகித்தார்.

தலைமை நிலையப் பேச்சாளர் நிர்மலா பெரியசாமி, அதிமுக விவசாயப் பிரிவு தலைவர் துரை. கோவிந்தராஜன், மக்களவை உறுப்பினர் கு. பரசுராமன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம். ரெங்கசாமி, எம். ரெத்தினசாமி, மேயர் சாவித்திரி கோபால், மாவட்ட ஊராட்சி தலைவர் அமுதா ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, அதிமுக நகரச் செயலர் வி. பண்டரிநாதன் வரவேற்றார். தொகுதி இணைச் செயலர் பாலை. ரவி நன்றி கூறினார்.

### குறுவை நெற்பயிரைக் காக்க எலி வேட்டை

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி நெற்பயிர்களை எலிகள் சேதப்படுத்துவதிலிருந்து காக்கும் விதமாக செவ்வாய்க்கிழமை (செப்.8) 1,844 ஊராட்சிகளில் எலிக்கட்டுப்பாடு செயல்விளக்கம் மற்றும் விவசாய நிலங்களில் எலி ஒழிப்பு மருந்து வைக்கும் பணி நடைபெறுகிறது.

காவிரி டெல்டா மாவட்டங்களான கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, அரியலூர் ஆகிய 6 மாவட்டங்களில் மொத்தம் 1,844 ஊராட்சிப் பகுதிகளில் குறுவை சாகுபடி நடைபெற்றுள்ளது. தற்போது நெற்பயிர்கள் வளர்ச்சி நிலை மற்றும் தூர்கட்டும் பருவத்தில் உள்ளன. இந்நிலையில் பூச்சி நோய் தாக்குதல் மட்டுமின்றி, அதிகளவில்

எலிகளால் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, தமிழக அரசு இதைக் கருத்தில் கொண்டு எலி ஒழிப்பு மருந்து தயாரித்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க உத்தரவிட்டுள்ளது. இதற்காக ரூ. 1.47 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

இதன்மூலம் விளைநிலங்களில் எலிமருத்து செயல்விளக்கமும், ஒரு ஊராட்சிக்கு தலா 10 கிராம் எடையுள்ள 10 ஆயிரம் எண்ணிக்கை கொண்ட எலிமருந்து பொட்டலங்களும் விலையில்லாமல் வழங்கப்படுகிறது.

இதற்கான எலிமருந்துகள் அந்தந்த வட்டார வேளாண்துறை ஊழியர்கள் மூலம், அரிசி, புரோமோடயலான், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த எலிமருந்தை அனைத்து ஊராட்சிகளின் வயல்களில் உள்ள எலி வலைகளில் ஒரே நாளில் வைக்க வேண்டும் என்றும், இந்தப் பணிகளில் மக்கள் பிரதிநிதிகள், கிராம ஊராட்சித் தலைவர்கள், குறுவை சாகுபடி பங்கேற்பு விவசாயிகள், உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர்கள், உழவர் நண்பர்கள், அம்மா பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் ஆகியோரை பயன்படுத்திக் கொள்ள வேளாண்துறை அதிகாரிகளுக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## குமரியில் சாரல் மழை நீடிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக பரவலாக சாரல் மழை நீடித்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நாகர்கோவில், ஆரல்வாய்மொழி, புத்தன்அணை, கன்னிமார், கொட்டாரம் உள்பட மாவட்டத்தின் புறநகர் பகுதிகளில் சாரல் மழை பெய்தது. திற்பரப்பு அருவி பகுதியிலும் மிதமான மழை பெய்ததால்

அருவியில் வெள்ளம் கொட்டியது. மலையோரப் பகுதியான பாலமோர் பகுதியில் பலத்த மழை பெய்தது. பேச்சிப்பாறை அணை பகுதியில் அதிகபட்சமாக 17.6 மி.மீ. மழை பதிவானது.

திங்கள்கிழமை காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 36.80 அடியாக உள்ளது. அணைக்கு 616 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து 810 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 59.36 அடியாக உள்ளது. அணைக்கு 73 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இந்த அணையிலிருந்து 153 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 12.33 அடியாக உள்ளது. அணைக்கு 172 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 200 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. சிற்றாறு 2 அணையின் நீர் மட்டம் 12.43 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 8.80 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 51.51 அடியாகவும் உள்ளது. நாகர்கோவில் நகருக்கு குடிநீர் விநியோகிக்கப்படும் முக்கடல் அணையின் நீர்மட்டம் 19.95 அடியாகவும் இருந்தது.

மாவட்டம் முழுவதும் பரவலாக சாரல் மழை நீடித்து வருவதால் வெப்பம் நீங்கியது. இதனால் இம் மாவட்ட மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### "இயந்திர நெல் நடவுக்கு மானியம் பெறலாம்'

திருச்செந்தூர் வட்டார விவசாயிகள், இயந்திரம் மூலம் நெல் நடவு செய்தால் அரசு மானியம் பெறலாம் என வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூர் வட்டாரத்தில் இயந்திர நெல் நடவு விழிப்புணர்வு முகாம்கள் நல்லூர், அம்மன்புரம், வன்னிமாநகரம் ஆகிய கிராமங்களில் நடைபெற்றது. இதில், ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டு இயந்திர நடவு முறைகுறித்து அறிந்துகொண்டனர்.

அப்போது, திருச்செந்தூர் வேளாண் உதவி இயக்குநர் பிரம்மநாயகம் கூறியதாவது: திருச்செந்தூர் வட்டாரத்தில் பிசானம், முன்கார் பருவங்களில் சுமார் 1,700 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த 2014-15 ஆண்டு பிசான பருவத்தில் சுமார் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது.

இன்றைய சூழ்நிலையில் நெல் நடவுக்கு விவசாய தொழிலாளர்கள் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. மேலும் அவர்களது ஊதியமும் கணிசமாக உயர்ந்துள்ளது. இதனால், நெற்பயிருக்கு வழக்கமான தொழி நாற்றங்கால் தயாரிப்பு, நெல் நடவு ஆகியவற்றுக்கு சாகுபடி செலவு இரட்டிப்பாகிறது. இத்தகைய செலவினங்களை குறைக்கும் வகையில் நெல் இயந்திர நடவு தொழில்நுட்பம் அறிமுகமாகி சில விவசாயிகள் இம்முறையில் நெல் நடவு செய்கின்றனர்.

இவ்வாறு இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு வேளாண் துறை சார்பில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.3,000 மானியமாக வழங்கப்பட உள்ளது. இத்தொகை பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக அரசு மூலம் செலுத்தப்படும். இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள விவசாயிகள் தங்களது பெயரை அந்தந்த பகுதி வேளாண் அலுவலர், துணை வேளாண் அலுவலர், உதவி வேளாண் அலுவலர் உள்ளிட்டோரை தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து கொள்ளலாம். இதன் மூலம் அரசு மானியம் பெறுவதுடன், சாகுபடி செலவைக் குறைத்து, அதிக லாபம் அடையலாம் என்றார் அவர்.

## கடனாநதி அணை ஓரிரு நாளில் மூடல்? 4,500 ஏக்கரில் நெற்பயிர் கருகும் அபாயம்

கடனாநதி அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 28 அடியாகக் குறைந்தது. ஒருசில தினங்களில் அணை மூடப்படும் சூழல் உருவாகி உள்ளதால், இப்பாசனத்தில் சாகுபடி செய்துள்ள 4,500 ஏக்கர் நெற்பயிர் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தென்மேற்குப் பருவமழை சரிவர பெய்யாததால் நிகழ் பருவத்தில் எதிர்பார்த்தவாறு அணைகளின் நீர்மட்டம் உயரவில்லை. நிகழ் கார் பருவத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் 17,000 ஹெக்டேரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது.

கடனாநதி அணையின் நீராதாரத்தின் வாயிலாக ஆம்பூர் மஞ்சப்புளி கால்வாய், அரசபத்து கால்வாய், ஆழ்வார்குறிச்சி கால்வாய், பெருங்கால், காக்கநல்லூர் கால்வாய், காங்கேயம் ஆகிய கால்வாய்கள் மூலம் சுமார் 4,500 ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் முதல் வாரத்தில் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. ஆரம்பத்தில் 110 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்த நிலையில்,அணையின் நீர்மட்டம் குறைந்ததையடுத்து, பாசனத்துக்கு 70 கனஅடி மட்டும் திறந்துவிடப்படுகிறது.

திங்கள்கிழமை அணையின் நீர்மட்டம் 28 அடியாக குறைந்தது. அணையின் நீர் இருப்பில் 20 அடி வரை சேறு, சகதியும் இருப்பதால் தொடர்ந்து அணையிலிருந்து தண்ணீர் திறக்க முடியாத சூழல் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 30 கனஅடி நீர்வரத்து இருந்தது. ஆகவே, ஒருசில தினங்களில் அணை மூடப்படலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. இதனால், இப்பகுதியில் பாசனம் கேள்விக்குறியாகியுள்ளது.

இதுகுறித்து மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலர் ஆர். கசமுத்து கூறியதாவது: ஏற்கெனவே சரியாக தண்ணீர் கிடைக்காமல் மேட்டுப் பகுதியில் நெற்பயிர்கள் கருகிவிட்டன. நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருவதால் இப்பாசனத்தில் சாகுபடி செய்துள்ள 4,500 ஏக்கர் நெற்பயிரும் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

திங்கள்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 481.83 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 359 கனஅடியும், ராமநதி அணைக்கு 24.45 கனஅடியும், குண்டாறு அணைக்கு 5 கன அடியும், அடவிநயினார் அணைக்கு 3 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

**மாவட்டத்தில் பரவலாக மழை: மக்கள் மகிழ்ச்சி**

மாவட்டத்தில் திங்கள்கிழமை பரவலாக பெய்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

திண்டிவனம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் திங்கள்கிழமை காலை முதல் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதையடுத்து, மாலை 5 மணியளவில் திடீரென லேசான சாரலுடன் தொடங்கிய மழை பின்பு கனமழையாக மாறியது.

இதனால் நகரின் முக்கிய வீதிகளில் சென்ற பொதுமக்கள், பள்ளியில் இருந்து வீடு திரும்பிய மாணவர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மழைக்காக ஆங்காங்கே ஒதுங்கி நின்றனர். மழை காரணமாக நகரில் உள்ள வீதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. பகலில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தாலும், மாலையில் பெய்த திடீர் மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது. இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

கல்வராயன்மலைப் பகுதியில் தொடர் மழை: இதேபோல், சின்னசேலம் வட்டத்தைச் சேர்ந்த கல்வராயன்மலைப் பகுதியில் இரு நாள்களாக பெய்த தொடர் மழையால் கோமுகி அணையில் நீர்மட்டம் 32 அடியை எட்டியது. இதேபோல் கள்ளக்குறிச்சி அருகே உள்ள பெரியார் நீர்வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதன் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விழுப்புரத்திலும் திங்கள்கிழமை மாலை இடி மின்னலுடன் பரவலாக மழை பெய்தது.

தினத்தந்தி DAILY THANTHI

வெல்க தமிழ்

## திண்டுக்கல்லுக்கு குடிநீர் வழங்கும் காமராஜர் அணை நீர்மட்டம் உயர்வு



திண்டுக்கல்,

திண்டுக்கல்லுக்கு குடிநீர் வழங்கும் ஆத்தூர் காமராஜர் அணையின் நீர்மட்டம் 17½ அடியாக உயர்ந்துள்ளது.

காமராஜர் அணை

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூரில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கூழையாறு, குடகனாறு ஆகியவற்றின் குறுக்கே காமராஜர் அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையின் மொத்த உயரம் 23.6 அடி ஆகும்.

இதனால் மழையின் போது விரைவாக நிரம்பும் அணை, அதே வேகத்தில் மளமளவென வற்றிவிடுவதும் உண்டு. எனினும், கடந்த 52 ஆண்டுகளுக்கு மேலாக திண்டுக்கல் நகர் மட்டுமின்றி சில வழியோர கிராமங்களுக்கும், காமராஜர் அணை குடிநீர் வழங்கி வருகிறது. அணையில் இருந்து தினமும் சராசரியாக 5 எம்.எல்.டி. தண்ணீர் எடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

நீர்மட்டம் உயர்வு

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த தொடர் மழையின் காரணமாக அணையின் மொத்த கொள்ளளவை எட்டியது. அதன்பின் அவ்வப்போது மழை பெய்ததால், அணையின் நீர்மட்டம் உயர்வதும், பின்னர் குறைவதுமாக இருந்தது. இந்த நிலையில் கடந்த 2 வாரங்களாக கடுமையான வெயில் கொளுத்தியது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் வெகு வேகமாக குறைந்தபடி இருந்தது. நேற்று முன்தினம் நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 17 அடியாக இருந்தது. இதற்கிடையே மலைப்பகுதியில் திடீரென மழை கொட்டியது. இதையடுத்து நேற்று அதிகாலையில் அணைக்கு தண்ணீர் வரத்தொடங்கியது.இதனால் நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 17½அடியாக உயர்ந்தது. மேலும் அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வருவதால் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்பு இருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஈரோட்டில் இடி–மின்னலுடன் கொட்டி தீர்த்த மழை



ஈரோடு,

ஈரோட்டில் இடி –மின்னலுடன் நேற்று மழை கொட்டி தீர்த்தது.

<u>தொடர் மழை</u>

ஈரோட்டில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மாலை மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் நேற்று காலையில் இருந்தே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அதனால் பகல் நேரத்தில் சூரியனை பார்க்க முடியவில்லை. அதைத்தொடர்ந்து மாலை 5 மணி அளவில் சாரல் மழை பெய்தது. சிறிது நேரத்தில் இந்த மழை வழுவடைந்து பெரிய மழையாக பெய்தது.

மாலை 5.30 மணி வரை சுமார் ½ மணி நேரம் மழை வெளுத்து வாங்கியது. அதன் பின்னரும் சாரல் மழை பெய்துகொண்டே இருந்தது. இதனால் ரோடுகளில் மழைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சில இடங்களில் சாக்கடை கால்வாயில் அடைப்பு ஏற்பட்டதால்

மழைவெள்ளம், சாக்கடை கழிவுநீருடன் ரோட்டில் ஓடியது. ஈரோடு நாச்சியப்பாவீதி, கொங்காலம்மன் கோவில் வீதி, நேதாஜி வீதி உள்பட பல்வேறு இடங்களில் மழைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சில இடங்களில் மழைநீர் குட்டை போல் தேங்கி நின்றது.

ஈரோடு சம்பத்நகர் வீட்டுவசதி வாரியம் 'டி' பிளாக் பகுதியில் நேற்று மாலை பெய்த மழையால் குளம்போல் தண்ணீர் தேங்கி நின்றது. இதனால் பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியே வரமுடியாமல் மிகவும் சிரமப்பட்டனர். சுமார் 2 மணிநேரத்திற்கு பிறகு மழைநீர் வடிந்து சென்றாலும், அந்த பகுதி சேறும், சகதியுமாக காணப்பட்டது. எனவே அங்கு சாலையை சீரமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

<u>பாதாள சாக்கடை பணிகள்</u>

தற்போது ஈரோடு மாநகரின் பல பகுதியில் பாதாள சாக்கடை கால்வாய் பணிக்காக பொக்லைன் எந்திரம் மூலம் குழிகள் தோண்டப்பட்டு வருகிறது. சில இடங்களில் பாதாள சாக்கடை பணிகள் முடிவடைந்து குழிகள் மூடப்பட்டுள்ளன. ஆனால் அந்த குழிகள் சரியாக மூடப்படாததால் ரோடுகளில் பள்ளம் ஏற்பட்டு அதில் மழைநீர் தேங்கி நின்றது.

மேலும் தோண்டப்பட்ட குழிகள் சில இடங்களில் மூடப்படாமல் உள்ளதால் அதிலும் மழைநீர் தேங்கி நின்றது. இதனால் பொதுமக்கள் ரோடுகள் மற்றும் தெருவில் நடக்க முடியாமலும், வாகன ஓட்டிகள் வாகனங்களை ஓட்ட முடியாமலும் மிகவும் சிரப்பட்டனர்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறும்போது, 'ஈரோடு மாநகரில் நடந்து வரும் பாதாள சாக்கடை பணிகளை விரைந்து முடிக்கவேண்டும். மேலும் பணிகள் முடிந்த இடத்தில் உடனடியாக ரோடுகள் போட வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தனர். தற்போது பெய்து வரும் இந்த தொடர் மழையால் ஈரோட்டில் இரவு நேரத்தில் குளிர்ந்த காற்று வீசுகிறது.

<u>சத்தியமங்கலம்</u>

சத்தியமங்கலம் பகுதியில் நேற்று மாலை 4 மணிக்கு வானில் மேகங்கள் திரண்டு வந்தன. பின்னர் 4.45 மணிக்கு மழை தூற தொடங்கியது. இதனைத்தொடர்ந்து 5.30 மணிக்கு இது பலத்த மழையாக மாறியது. இரவு 8 மணி வரை பலத்த மழை நீடித்தது. இதனால் சத்தியமங்கலத்தில் ரோடுகளில் மழைநீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் புகுந்தது. இந்த மழையின் காரணமாக சத்தியமங்கலம் நகர் முழுவதும் மின் தடை ஏற்பட்டது. இதேபோல் ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நேற்று மாலை முதல் இரவு மழை தூறிக்கொண்டு இருந்தது.

<u>மழைஅளவு</u>

ஈரோடு மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

சிவகிரி –25

சென்னிமலை –20

பவானி –6.4

மொடக்குறிச்சி –6

கவுந்தப்பாடி –6

கோபி –4.3

ஈரோடு –2

பெருந்துறை –1

### பெனுகொண்டாபுரத்தில் 45.3 மில்லி மீட்டராக பதிவு



கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதில்பெனுகொண்டா புரத்தில் 45.3 மில்லி மீட்டராக மழை பதிவானது.

தொடர் மழை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பகலில் வெயிலும், மாலை மற்றும் இரவு நேரங்களில் தொடர்ச்சியாக மழையும் பெய்து வருகிறது. இதேபோல நேற்று முன்தினம் இரவு மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. போச்சம்பள்ளி, காவேரிப்பட்டணம், சூளகிரி, ஓசூர், பாரூர் என்று மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்தது.

தற்போது பல இடங்களில் விவசாயிகள் சோளம், வேர்க்கடலை போன்றவை பயிரிட்டுள்ளார்கள். மழைக்காரணமாக இதை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். மாவட்டத்தில் அதிக பட்சமாக பெனுகொண்டாபுரத்தில் 45.3 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் நேற்று காலை 8 மணி நிலவரப்படி பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:-
மழை அளவு

பெனுகொண்டாபுரம்-45.3, சூளகிரி-32, ஊத்தங்கரை-22, ஓசூர்-19, ராயக்கோட்டை-13, போச்சம்பள்ளி-9.2, கிருஷ்ணகிரி-7.8, நெடுங்கல்-5.2, தேன்கனிக்கோட்டை-4, அஞ்செட்டி-3.2. மாவட்டம் முழுவதும் மொத்தம் 160.7 மில்லி மீட்டர் மழை அளவு பதிவாகி உள்ளது. இதே போல கிருஷ்ணகிரி சுற்று வட்டாரம் மற்றும் மாவட்டம் முழுவதும், நேற்றும் பிற்பகல் முதல் மழை பெய்தது.

மழைக்காரணமாக பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விவசாய பணிகளை எளிமையாக்க தொழில்நுட்பம் முக்கியமானது உதவி கலெக்டர் பேச்சு



விவசாய பணிகளை எளிமையாக்க தொழில்நுட்பம் முக்கியமானது என்று உதவி கலெக்டர் ரோகிணி ராமதாஸ் பேசினார்.

பயிற்சி தொடக்க விழா

மதுரையில் மத்திய அரசின் வழிகாட்டுதலோடு இயங்கும் வாப்ஸ் நிறுவனத்தில் விவசாய பட்டதாரி மற்றும் பட்டய மாணவர்களுக்கான பயிற்சியின் தொடக்க விழா நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட மதுரை மாவட்ட உதவி கலெக்டர் ரோகிணி பேசியதாவது:- மராட்டிய மாநிலம் சோலாப்பூர் மாவட்டத்தில் எங்களுக்கு இருந்த நிலத்தில் பல ஆண்டுகளாக மிளகாய் சாகுபடி செய்யப்பட்டது. ஆனால்,

மாற்று முயற்சியாக எனது தந்தை அதே மண்ணில் திராட்சையை பயிரிட முனைந்தார். இதையறிந்த மற்ற விவசாயிகள், வறட்சியான அந்த மண்ணில் திராட்சை விளைவது சாத்தியமல்ல என்றனர்.

ஆனால், எனது தந்தை திராட்சை பயிரிடப்பட்டிருந்த பிற இடங்களுக்கு சென்று அதன் நுட்பங்களை கற்று வந்து, எங்களது மண்ணில் திராட்சையை பயிரிட்டார். முடிவில் யாருமே எதிர்பாராத வகையில் அமோகமாக திராட்சை விளைந்தது. தோட்டம் முழுவதும் விளைந்து கிடந்த திராட்சையை காண அருகிலும், சுற்றுவட்டாரங்களிலும் இருந்து விவசாயிகள் திரண்டு வந்து பார்வையிட்டனர். மனது வைத்தால் எந்த மண்ணிலும் விவசாயத்தை சாதிக்க முடியும் என்பதை அனைவரும் நடைமுறையில் தெரிந்து கொண்டனர்.

தொழில் நுட்பம்

பொதுவாக, விவசாயத்தில் தொழில் நுட்பத்தின் பங்கு முக்கியமானது. விவசாய பணிகளை எளிமையாக்க உதவும் வகையில் ஏராளமான தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றை எல்லாம் விவசாயிகள் தெரிந்து கொண்டு தங்களது சாகுபடியின் போது, அவற்றை பயன்படுத்தி மகசூலை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் இந்தியன் வங்கியின் உதவி பொது மேலாளர் விஜயகுமார் பேசும் போது, மாணவர்களுக்கு அளிக்கப்படும் விவசாய பயிற்சி உயரிய நோக்கங்களை கொண்டதாக இருக்கிறது என்றார். இதில் முன்னோடி வங்கி மேலாளர் ஆர்.முருகபிரபு, நபார்டு உதவி பொதுமேலாளர் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக, மைய தொடர்பு அலுவலர் அருள் வரவேற்றார். நிறைவில் வாப்ஸ் தொழில்நுட்ப ஆலோசகர் பொதும்பு சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## பரமத்தி வேலூரில் மக்காச்சோளம் விலை உயர்வு



பரமத்தி வேலூரில் மக்காச்சோளம் விலை உயர்ந்து உள்ளதால் அதை பயிர் செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

மக்காச்சோள பயிர்

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா பெருங்குறிச்சி, சோழசிராமணி, ஜமீன்இளம்பள்ளி, கொத்தமங்கலம், ஜேடர்பாளையம், திடுமல்கவுண்டம் பாளையம், கபிலர்மலை, ஆனங்கூர், அண்ணாநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் மக்காச்சோளம் பயிர் செய்யப்பட்டு உள்ளது. மேலும் மஞ்சள் மற்றும் கரும்பு ஆகியவற்றில் ஊடுபயிராகவும் மக்காச்சோளம் பயிர் செய்யப்படுகிறது.

இந்த பகுதிகளில் நன்கு விளைந்த மக்காச்சோளத்தை நன்கு காயவைத்து எந்திரம் மூலம் சோளக்கதிரில் இருந்து மக்காச்சோளத்தை மட்டும் பிரித்து

எடுத்து நேரடியாக வரும் வியாபாரிகளிடம் விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். மக்காச்சோளத்தில் அதிக அளவில் சத்துக்கள் நிறைந்து உள்ளதால் பச்சை மக்காச்சோளக் கதிர்களை வியாபாரிகள் நேரடியாக விவசாயிகளிடம் இருந்து வாங்கி சென்று வேகவைத்து சந்தைகள் மற்றும் முக்கிய பகுதிகளில் விற்பனை செய்கின்றனர். வேகவைத்த மக்காச்சோளக் கதிர்களை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆர்வத்துடன் வாங்கி சாப்பிடுகின்றனர்.

விலை உயர்வு

மேலும் காயவைக்கப்பட்ட மக்காச்சோளம் ஈரோடு மாவட்டம் கொடுமுடி அருகே உள்ள சாலைப்புதூர் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை மையத்திற்கு சீல்டு டெண்டர் மூலம் ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஏலம் விடப்படுகிறது. இவற்றை ஏலம் எடுப்பதற்கு தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் வியாபாரிகள் கொடுமுடி, சாலைப்புதூர் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு வந்து ஏலம் எடுத்து செல்கின்றனர். ஏலம் எடுத்துச்செல்லப்படும் மக்காச்சோளம் கோழித்தீவனம் தயாரிக்கும் ஆலைகளுக்கும், மக்காச்சோள மாவு அரைக்கும் ஆலைகளுக்கும் கொண்டு செல்லப்படுகிறது.

கடந்த வாரம் 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை மக்காச்சோளம் ரூ.ஆயிரத்து 350-க்கு விற்பனை ஆனது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை மக்காச்சோளம் ரூ.ஆயிரத்து 750-க்கு விற்பனை ஆனது. மக்காச்சோள உற்பத்தி குறைந்து இருப்பதாலும், மக்காச்சோளத்தின் தேவை அதிகமாக இருப்பதாலும் மக்காச்சோளம் விலை உயர்ந்து உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். இதன் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 340 மூட்டை நிலக்கடலை ரூ.4½ லட்சத்துக்கு ஏலம்




சேலம் பள்ளப்பட்டி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நிலக்கடலை மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்தனர். மல்லூர், பனமரத்துப்பட்டி, கம்மாளப்பட்டி, வீரபாண்டி, பாரப்பட்டி, அயோத்தியாப்பட்டணம், குப்பனூர், பேளூர், வாழப்பாடி, ஓமலூர், மேச்சேரி, காலமாபுரம் ஆகிய ஊர்களில் இருந்து விவசாயிகள் 340 மூட்டை நிலக்கடலைகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர்.

60 கிலோ எடை கொண்ட ஈரப்பதமான நிலக்கடலை மூட்டை ஒன்றுக்கு ரூ.1,605 முதல் ரூ.1,989 வரையும், காய்ந்த நிலக்கடலை மூட்டை ஒன்றுக்கு ரூ.3,015 முதல் ரூ.3,085 வரை என்றும் விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. சேலம், ஈரோட்டை சேர்ந்த வியாபாரிகள்

நிலக்கடலை மூட்டைகளை போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். மொத்தத்தில் 340 மூட்டை நிலக்கடலையும் ரூ.4 லட்சத்து 50 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## சொட்டுநீர் பாசனம் மூலம் மஞ்சள் பயிர் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்



மூங்கில்துறைப்பட்டு,

மூங்கில்துறைப்பட்டு பகுதியில் சொட்டுநீர் பாசனம் மூலம் மஞ்சள் பயிர் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சொட்டு நீர் பாசனம்

மூங்கில்துறைப்பட்டு மற்றும் அதனை சுற்றியுள்ள பொரசப்பட்டு, பொருவளூர், மேல்சிறுவள்ளூர், சவேரியார்பாளையம், வடகீரனூர், வடபொன்பரப்பி, கடுவனூர், புளியங்கொட்டை உள்பட பல்வேறு

கிராமங்களில் விவசாயிகள் கரும்பு, நெல் உள்ளிட்ட பயிர்களை அதிக பரப்பளவில் சாகுபடி செய்து வந்தனர். இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளாக போதிய மழையின்மை காரணத்தால் சாகுபடி செய்திருந்த பயிர்கள் பாதிக்கப்பட்டது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

இதையடுத்து மூங்கில்துறைப்பட்டு பகுதியை சேர்ந்த விவசாயிகள் தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்கும் வகையில் தற்போது சொட்டு நீர் பாசனம் மூலம் மஞ்சள் பயிரை சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:– சொர்ட்டு நீர் பாசனம் மூலம் பயிர்கள் சாகுபடி செய்வதால் எங்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடும் அதிக அளவில் களைகளும் வருவது இல்லை. இதனால் உற்பத்தி செலவு எங்களுக்கு பெருமளவு குறைந்துள்ளது. இதேபோல் மணிலா பயிரையும் சொட்டு நீர் பாசனம் மூலம் விவசாயிகள் பலர் சாகுபடி செய்துள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தினகரன்

**தமிழகத்தில் 2 நாட்களுக்கு மழை : வானிலை ஆய்வு மையம் தகவல்**




சென்னை: தமிழகத்தில் நிலவும் வெப்ப சலனம் காரணமாக வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்டுள்ள காற்று சுழற்சியால் தமிழகத்தில் இடியுடன்

2நாட்களுக்கு மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடல் பகுதியில் நிலவும் வெப்பம் மற்றும் ஈரப்பதம் குறைந்த காற்று ஆகியவை காரணமாக தரைக்காற்று வீசுவது குறைந்துள்ளது. இதனால் வெப்ப சலனம் ஏற்பட்டு தமிழகத்தில் தொடர்ந்து வெயில் கொளுத்தி வருகிறது. இதனால் வெப்ப சலனம் ஏற்பட்டு வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இந்நிலையில், தொடர்ந்து வெப்ப சலனம் நீடிப்பதுடன், வளி மண்டலத்தில் உருவான காற்று சுழற்சி ஆந்திரா மற்றும் வட தமிழகத்தை ஒட்டி கடலோரப் பகுதியில் நிலை கொண்டுள்ளதால் தமிழகத்தில் வேலூர், சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் பரவலாக இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும். தென்மாவட்டங்களிலும் பரவலாக 2 நாட்களுக்கு மழை நீடிக்கும். கோவை, நீலகிரி, தேனி உள்ளிட்ட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலும் மழை பெய்யும். சென்னையில் பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநில அரசுகள், தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து

**உணவு தரத்தை ஆய்வு செய்ய புது திட்டம்: உணவு பாதுகாப்பு ஆணையம் அதிரடி**



புதுடெல்லி: உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மாநில அரசு ஏஜென்சிகள், தன்னார்வ நிறுவனங்கள், நுகர்வோர் அமைப்புகளுடன் இணைந்து ஆய்வு செய்வதற்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் முடிவு செய்துள்ளது. மேகி நூடுல்ஸ்களில் அளவுக்கு அதிகமாக காரீயம் மற்றும் மோனோ சோடியம் குளுக்கோமேட் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து, உணவு பொருட்களின் தரம், குறிப்பாக பாக்கெட் உணவுகள் பாதுகாப்பானதாக இருக்கிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் தேவையும் வலுத்து வருகிறது.

இதற்கேற்ப இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (எப்எஸ்எஸ்ஏஐ) பால் பொருட்கள், ஐஸ்கிரீம் என ஒவ்வொரு உணவு வகைக்கும் ஏற்ப தர நிர்ணய வரையறைகளை வகுத்து வருகிறது. இதுமட்டுமின்றி, நாடு முழுவதும் நுகர்வோரிடம் இருந்து வரும் புகார்களின் அடிப்படையில் ஆங்காங்கு பாக்கெட் உணவுகள் கடைகளில் இருந்து கொண்டுவரப்பட்டு ஆய்வுக்கூடங்களில் சோதனையிடப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், நாடுமுழுவதும் உணவு தர ஆய்வு மேற்கொள்ள வசதியாக, மாநில அரசுகளுடன் இணைந்து செயல்பட எப்எஸ்எஸ்ஏஐ முடிவு செய்துள்ளது. குறிப்பாக, மத்திய, மாநில அரசுகளின் உணவு பாதுகாப்பு மற்றும் ஆய்வு தொடர்பான துறைகள், நுகர்வோர் அமைப்புகள், தன்னார்வ அமைப்புகள் ஆகியவற்றின் உதவியுடன் உணவு தரத்தை உறுதி செய்ய ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எப்எஸ்எஸ்ஏஐ திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய அதிகாரி ஒருவர் கூறுகையில், உணவு பாதுகாப்பு சட்டத்தை பொறுத்தவரை, முதல் கட்டமாக இவற்றை செயல்படுத்தும் அதிகாரம் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிடம் உள்ளது. உணவு

பாதுகாப்பு குறைவால் பாதிக்கப்படுவது நுகர்வோர்தான். எனவே, இது சார்ந்த அனைத்து அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவது முக்கியம். இதன்மூலம் உணவு பாதுகாப்பு தொடர்பான மாநில அரசு அமைப்புகள், தன்னார்வ நிறுவனங்கள், கல்லூரிகள் என அனைத்து தரப்பும் தங்கள் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். இதனால், நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுவதோடு, சாலையோர கடைகள், உணவு தயாரிப்பு சிறுதொழில்களின் தரத்தையும் மேம்படுத்த முடியும்'' என்றார்.

**வேளாண் பொருட்கள் ஏற்றுமதி ஜூலையில் சரிவு**




புதுடெல்லி: நாட்டின் மொத்த ஏற்றுமதியில் வேளாண் பொருட்களின் பங்களிப்பு 10 சதவீதமாக உள்ளது. இந்நிலையில் கடந்த ஜூலை மாதத்தில் 13 முக்கிய வேளாண் பொருட்களில் 10 பொருட்களின் ஏற்றுமதி சரிவடைந்துள்ளது என மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஜூலையில் அரிசி 6.7 சதவீதம், நறுமண பொருட்கள் 2.5 சதவீதம், புகையிலை 3.4 சதவீதம் சரிந்துள்ளன. மேலும் உணவு தானியங்கள் (71.56 சதவீதம்), எண்ணெய் வித்துக்கள் (43.61) சதவீதம், பழம் மற்றும் காய்கறிகள் (11.38) சதவீதம் பின்னடைந்துள்ளன.

சர்வதேச சந்தையில் வேளாண் பொருட்கள் விலை சரிவடைந்துள்ளது. இதனால் வர்த்தகர்கள் உள்நாட்டு சந்தையில் ஆர்வம் காட்டுவதால் ஏற்றுமதி சரிந்துள்ளது என இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## திருச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நாளை முதல் 10ம் தேதி வரை நடக்கிறது

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நாளை முதல் 10ம் தேதி வரை நடக்கிறது. திருச்சி மாவட்டத்தில் உள்ள சூரியூர், காஜாப்பேட்டை, கிராப்பட்டி, ரயில்வே காலனி, எட்டரை, திருவானைக்காவல், கொடியாலம், டி.இடையப்பட்டி, அதவத்தூர், கண்ணுடையான்பட்டி, குமாரவாடி (கிழக்கு), மங்களம், திருத்தியமலை, மணலி ஆயத்தம்பட்டி, மேட்டுப்பட்டி, பச்சனாம்பட்டி, கொள்ளப்பட்டி, கோட்டப்பாளையம், மாராடி, கண்ணனூர்பாளையம், கிளியனூர்பட்டி, வேலாயுதம்பாளையம், அய்யம்பாளையம், தொட்டியம், கொட்டமேடு, போசம்பட்டி, சந்தைப்பேட்டை, சித்தூர், வடகரை, அய்யம்பாளையம், பல்லபுரம், முதுவத்தூர், கீழரசூர், துறையூர் நகராட்சி 9, 10, 11, 12வது வார்டுகளில் கால்நடைகளுக்கான கால் மற்றும் வாய் தடுப்பூசி முகாம் நாளை நடக்கிறது.

குண்டூர், காஜாப்பேட்டை, பொன்மலை மலையடிவாரம், எட்டரை, திருவானைக்காவல், கோப்பு, கண்ணுக்குழி, எண்டப்புளி, சோமரசம்பேட்டை, வயலூர், பன்னப்பட்டி (கிழக்கு), குமாரவாடி (மேற்கு), சேருக்குடி, கொன்னப்பம்பட்டி, வெள்ளையம்பட்டி, பூமாலைப்புரம், முசிறி பேரூராட்சி, கேஎன்.பாளையம், சந்தப்பாளையம், ஆலமரத்துப்பட்டி, பார்வதிபுரம், விகே.பட்டி, வி.சமுத்திரம், கள்ளத்துக்கோம்பை, பொன்னுசங்கம்பட்டி, மேலகோத்தம்பட்டி,

தேவரப்பம்பட்டி, கள்ளிக்குடி, அரசலூர், வரதராஜபுரம், திருநாராயணபுரம், சுக்கம்பட்டி, மணியம்பட்டி, கனகாம்பாள்சமுத்திரம், சிறுபத்தூர், பெருவளநல்லூர் (கிழக்கு), பெருவளநல்லூர் (மேற்கு), திருமணமேடு, செவந்திநாதபுரம், திண்ணக்குளம் ஆகிய பகுதிகளில் முகாம் 9ம் தேதி நடக்கிறது.

வேங்கூர், கூத்தைப்பார், முதலியார்சத்திரம், கூகூர், இடையாற்றுமங்கலம், டி.வளனூர், திருவெள்ளரை, தோளூர்பட்டி, பாலசமுத்திரம், கணேசபுரம், கார்த்திகைப்பட்டி, முதலைப்பட்டி, தொட்டியாப்பட்டி, வீரமச்சான்பட்டி, குரும்பப்பட்டி, கெம்பியான்பட்டி, வி.தவிட்டுப்பட்டி, நாகமநாயக்கன்பட்டி, காவேரிப்பட்டி, ஆங்கியம், கோனேரிப்பட்டி, அழகாபுரி, சாலக்காடு, வேலம்மாப்பட்டி, கோம்பை, மூவானூர், கீழூர், மலையப்பபுரம், முசிறி டவுன், தண்ணீர்பந்தல், மாமரத்து தோட்டம், மாவிலிப்பட்டி, · கிருஷ்ணாபுரம், பைத்தம்பாறை, முள்ளிகரும்பூர், திருவளர்ச்சோலை, அந்தநல்லூர், செவல்பட்டி, முத்தாழ்வார்பட்டி, பழையபாளையம், நாச்சிக்குறிச்சி, தொப்பம்பட்டி, வி.பெரியப்பட்டி, ஆலம்பட்டி, ஆலம்பாக்கம் ஆகிய இடங்களில் சிறப்பு முகாம் 9ம் தேதி நடக்கிறது.

## ஆடுகளை தாக்கும் நீலநாக்கு நோய்கள் வேளாண் துறை ஆலோசனை

பழநி, : மழை காலங்களில் ஆடுகளை தாக்கும் நீலநாக்கு நோய்களில் இருந்து பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து பழநி வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.செம்மறி ஆடுகளில் பெரும் இழப்பை உண்டு பண்ணும் நோய்களில் நீலநாக்கு நோய் முக்கியமாக கருதப்படுகிறது. இந்நோய் நோய் எல்லா ஆடுகளுக்கும் வரும் என்றாலும், செம்மறி ஆடுகளில் தான் அதிக சேதத்தை ஏற்படுத்தும். மழை காலங்களில் கூலிகாய்ட்ஸ் என்ற பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதால் இந்நோய் தாக்குதல் அதிகமாக

காணப்படுகிறது. இந்நோய் ஒருவகை நச்சுயிரிகளால் செம்மறி ஆடுகளில் உருவாகிறது.

வெள்ளாடுகளை இக்கிருமி தாக்கினாலும், நோயின் தீவிரம் செம்மறி ஆடுகளில் இருப்பது போன்று அதிகமாக இருக்காது. நோயின் அறிகுறிகள். நோயுற்ற ஆடுகள் உடல் வெப்பநிலை உயர்ந்து அவை நடுக்கத்துடன் காணப்படும். 105 டிகிரி பாரன்ஹீட் முதல் 107 டிகிரி பாரன்ஹீட் வரை இருக்கும். மூக்கின் வழியே தண்ணீர் போன்ற திரவம் ஒழுகும். நாசி துவாரங்கள் அடைந்து மூச்சுவிட சிரமப்படும். வாயின் உட்பகுதி, ஈறுகள், நாக்கு, நாசி துவாரங்களின் உட்பகுதிகளில் புண்கள் காணப்படும். நாளடைவில் நாக்கில் வீக்கம் ஏற்பட்டு வாயின் வெளிப்பகுதியில் நீண்டு நீலநிறமாக மாறிவிடும். பாதிக்கப்பட்ட ஆடுகளில் ரத்த கழிச்சலும் காணப்படும். இந்நோய் தாக்கினால் 70 சதவீதம் வரை இறப்பு நேர வாய்ப்புள்ளது.

நோய் பராமரிப்பு: நோய் கண்ட ஆட்டினை தனியே பிரித்து நன்றாக பராமரிக்க வேண்டும். மேய்ச்சலுக்கு விடக்கூடாது. தீவனம் உண்ண முடியாத நிலை இருப்பதால் அரிசி, கம்பு, கேழ்வரகு ஆகியவற்றின் கஞ்சியினை நீர் ஆகாரம் போன்று தரவேண்டும். வாய், நாக்கு மற்றும் கால்களில் ஏற்பட்டுள்ள புண்களை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் அல்லது சாதாரண உப்பு கரைசல் கொண்டு நன்றாக கழுவ வேண்டும். புண்களுக்கு போரிக் ஆசிடி மருந்தினை வேப்பெண்ணெயில் கலந்து தடவ வேண்டும். 100 மி.லி. கிளிசரினில் 10 கிராம் போரிக் ஆசிட் பவுடரை கலக்கி வாயில் உள்ள புண்களுக்கு தடவ வேண்டும். ஊசி மூலம் நோய் பரவும் என்பதால், ஊசிகள் மூலம் மருந்து அளிக்க கூடாது. கால்நடை டாக்டர்களின் ஆலோசனைபடி சல்பா,

டெட்ராசைக்ளின் போன்ற மருந்தினை 3 நாட்களுக்கு தொடர்ந்து கொடுத்தால் நோயிலிருந்து காக்கலாம்

**பருவமழை துவக்கம் எதிரொலி கோவில்பட்டி பகுதியில் மக்காச்சோளம் விதைப்பு தீவிரம்**

கோவில்பட்டி, : பருவ மழை பெய்ய துவங்கியதையடுத்து கோவில்பட்டி பகுதியில் மானாவாரி விவசாயிகள் கம்பு, மக்காச்சோளம் விதைப்பு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, ஓட்டப் பிடாரம், விளாத்திகுளம், எட்டயபுரம், கயத்தாறு, கடம்பூர், கழுகுமலை, புதூர், நாகலாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டுதோறும் பெய்யும் பருவ மழையை நம்பி மானாவாரி நிலங்களில் விவசாயிகள் கம்பு, சோளம், பாசிப்பயறு, சூரியகாந்தி, மிளகாய், உளுந்து சாகுபடி செய்து வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக இங்குள்ள பெரும்பாலான கிராமங்களில் வடகிழக்கு பருவமழை பெய்ய துவங்கியுள்ளது. இதையடுத்து விவசாயிகள் நிலங்களை உழுது பண்படுத்தி பாசிப்பயறு, மக்காச்சோளம், கம்பு, வெள்ளை சோளம், பாசிப்பயறு, உளுந்து உள்ளிட்ட மானாவாரி பயிர்களை விதைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.ஏக்கருக்கு அடி உரமாக சுமார் 50 கிலோ டிஏபி பயன்படுத்துகின்றனர். புரட்டாசி மாதம் பிறக்க இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில் ஐப்பசி வரை 2 மாதங்கள் நல்ல மழை பெய்தால் பயிர்கள் செழிப்பாக வளரும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். மானாவாரி பயிர்கள் விதைப்பு பணி தீவிரமாக நடந்து வரும் நிலையில் 501 ரக வெள்ளைச் சோளம் வேளாண்மை விரிவாக்க மையங்களில் கிடைக்காததால் பெரும்பாலான விவசாயிகள் தனியார் விதை விற்பனை மையங்களை நாடிச் செல்கின்றனர்.

ஆனால், அரசு நிர்ணயித்த விலையை விட இங்கு விதைகள் கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது. அதாவது 3 கிலோ கொண்ட சோளம் விதை பை ரூ.400க்கு விற்க வேண்டிய நிலையில் கூடுதலாக ரூ.250 வைத்து ரூ.650க்கு விற்கின்றனர்.
மேலும் கூடுதல் விலை கொடுத்தும் விதைகளுக்கு உரிய பில் தர மறுப்பதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.
இதுகுறித்து அயன்வடமலாபுரம் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் வரதராஜன் கூறுகையில், 'கோவில்பட்டி, விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம், எட்டயபுரம் தாலுகா பகுதிகளில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு தேவையான மக்காச்சோளம், வெள்ளை சோளம், கம்பு போன்ற மானாவாரி பயிர் விதைகளை மானிய விலையில் வழங்க வேண்டும்.
தனியார் கடைகளில் கூடுதல் விலைக்கு விதைகள் விற்பதை வேளாண்மை அதிகாரிகள் கண்காணித்து தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

நீடாமங்கலம், : நீடாமங்கலம் ஒன்றியம் வெள்ளக்குடி ஊராட்சியில் கால்நடைகளை தாக்கும் கோமாரி நோய் தடுப்பூசி முகாமை கலெக்டர் மதிவாணன் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் கலெக்டர் பேசுகையில், மன்னார்குடி கோட்டத்தில் உள்ள 5 ஒன்றியங்களில் 9வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணிகள் மூலமாக 1 லட்சத்து 20 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி மருந்து பெறப்பட்டுள்ளது. இந்த கோட்டத்தில் மட்டும் இப்பணிகள் மேற்கொள்ள 23 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊராட்சியிலும் முதல்நாள் ஒலிபெருக்கியில் விளம்பரம் செய்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. வெள்ளக்குடி ஊராட்சியில் விலையில்லாத கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் 50 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார். உதவி

இயக்குனர் லூர்துசாமி, துணை இயக்குனர் உதுமான், மண்டல இயக்குனர் டேவிட் மற்றும் கால்நடை மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

**தமிழகத்தில் இருந்து அரபு நாடுகளுக்கு வாழைப்பழ ஏற்றுமதி 3 மடங்கு அதிகரிப்பு**



சென்னை, தமிழகம் முழுவதும் 2 லட்சத்து 50 ஆயிரம் 'ஹெக்டேர்' பரப்பளவில் வாழை சாகுபடி நடந்து வருகிறது. மாறிவரும் நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப, வாழை சாகுபடியில் ஒரே சீரான அளவில் வளரக்கூடிய திசு கலாசார முறையை (ஜி-9 தொழில்நுட்பம்) தமிழக தோட்டக்கலைத் துறை அறிமுகப்படுத்தியது. வெளிச்சந்தைகளில் ரூ.13-க்கு விற்பனை செய்யப்படும் திசு வாழை கன்று, தோட்டக்கலைத்துறை 50 சதவீத மானியத்தில் ரூ.6.50-க்கு விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

அதோடு வாழை விளைச்சலை அதிகரிப்பது, அதிக வருவாய் ஈட்டுவது போன்றவை குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகளையும் தோட்டக்கலைத்துறை வழங்கி வருகிறது. முதலில் தேனி மாவட்டத்தில்

தொடங்கப்பட்ட திசு வாழை சாகுபடி, பின்னர் தூத்துக்குடி, கோவை, கடலூர், திண்டுக்கல் உள்பட பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. புகை போட்டு வாழைத்தார்கள் பழுக்கவைக்கப்பட்டுவந்த சூழ்நிலையில், அதிலும் தோட்டக்கலை துறை நவீன யுக்தியை புகுத்தி உள்ளது.

பழங்களின் சத்து குறையாமல் 'ரைபனிங் யூனிட்' என்ற பழுக்கவைக்கும் கூடங்கள் மூலம் திசு வாழைகள் பழுக்க வைக்கப்படுகின்றன. இவ்வாறு பழுக்க வைக்கப்படும் பழங்கள் 5 நாட்கள் வரை அழுகாமல் தாக்குப்பிடிக்கும். தோட்டக்கலைத்துறையின் இந்த நவீன முயற்சிகளால், வாழை விவசாயிகள் ஹெக்டேருக்கு ரூ.2 லட்சம் வரை லாபம் ஈட்டி வருகின்றனர். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து தமிழ்நாடு வாழைப்பழ உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் கருப்பையா, பொதுச்செயலாளர் ஜி.அஜிதன் ஆகியோர் கூறியதாவது:-

விவசாயிகள் நலனில் அக்கறையோடு தமிழக அரசின் தோட்டக்கலைத் துறை விளங்கி வருகிறது. தோட்டக்கலைத் துறை ஆதரவால், தமிழ்நாட்டில் வாழைப்பழ உற்பத்தியில் புரட்சி ஏற்பட்டுள்ளது. முன்பு வெளிநாடுகளுக்கு வாழைத்தார்களாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. தற்போது 3 கிலோ, 5 கிலோ, 12 கிலோ என்று 3 விதமான அட்டை பெட்டிகளில் வாழைப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சவுதி அரேபியா, துபாய், குவைத் உள்பட அரபுநாடுகளுக்கு கடந்த ஆண்டு 200 கண்டெய்னர்கள் மூலம் 4 ஆயிரத்து 300 டன் வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்பட்டது. வாழை விளைச்சல் அதிகரித்ததன் மூலம் இந்த ஆண்டு 12 ஆயிரத்து 900 டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 3 மடங்கு அதிகம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை: 2 நாட்களுக்கு மழை பெய்யும்




சென்னை, வங்கக்கடலில் ஒடிசா கடற்கரையில் இருந்து ஆந்திரா, தென் தமிழ்நாடு வரை குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது.

இதே போல் அரபிக்கடலில் லட்சத்தீவு, கேரளா, கர்நாடக கடற்கரை பகுதியில் மேலடுக்கு சூழற்சி உருவாகி இருக்கிறது.இதன் காரணமாக ஆந்திராவில் பலத்த மழை பெய்து வருகிறது. தமிழ்நாட்டில் சேலம், வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவள்ளூர் உள்ளிட்ட வடமாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்துக்கு பலத்த மழை பெய்யும். தென் மாவட்டங்களில் பரவலாக பெய்து வரும் மழை 2 நாட்களுக்கு நீடிக்கும்.தேனி, கோவை, நீலகிரி ஆகிய மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்யும்.

இன்று வரை இந்த வானிலை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.சென்னையில் நேற்று காலை லேசாக மழை தூறியது. தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது. மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை ஒரு சில இடங்களில் பெய்யக்கூடும். இதனால் வெப்பம் குறையும் என்று வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.கடல் அலை

சீற்றத்துடன் காணப்படும், காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது.அரபிக்கடல் பகுதியில் உருவான மேலடுக்கு சூழற்சி காரணமாக தென் தமிழ் நாட்டில் பரவலாகவும், கேரளாவிலும் கர்நாடக கடற்கரை மற்றும் வடக்கு, தெற்கு உள் கர்நாடகாவிலும் மிக பலத்த மழை பெய்யும் என்றும் கேரளா, கர்நாடகாவில் 9–ந் தேதி வரை 3 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## தமிழகத்தில் 3 நாட்களுக்கு மழை வாய்ப்பு

தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் வெப்பச் சலனம் காரணமாக அடுத்த 3 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக வானம் மேகமூட் டத்துடன் காணப்படுகிறது. ஒரு சில இடங்களில் இரவு நேரங்களில் லேசான மழை பெய்து வருகிறது.

மாநிலத்தின் பெரும்பாலான மாவட்டங்களில், ஒரு சில இடங்களில் வெப்பச் சலனம் காரணமாக அடுத்த 3 நாட்களுக்கு லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. குறிப்பாக வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட வட மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் நேற்று காலை எடுக்கப்பட்ட மழை அளவின்படி கொடைக்கானலில் 38 மி.மீ., வேலூரில் 31 மி.மீ., தருமபுரியில் 14 மி.மீ. மழை பதிவானது.___

# விலை வீழ்ச்சியை கட்டுப்படுத்த_ ரப்பர் இறக்குமதியை தடுக்க வேண்டும்_: மத்திய, மாநில அரசுகளுக்கு விவசாயிகள் கோரிக்கை_



▲ குமரி மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள ரப்பர் மரங்கள் (கோப்புப் படம்).

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் விவசாயத்தை நம்பியுள்ள விவசாயிகளையும், தொழிலாளர்களையும் பாதுகாக்கும் வகையில் ரப்பர் இறக்குமதியைத் தடுக்க மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்த வேண்டுமென்று ரப்பர் சாகுபடியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில் ரப்பர் உற்பத்திக்கான தட்பவெட்பம் குமரி மாவட்டத்தில் மட்டுமே அமைந்துள்ளது. இம்மாவட்ட த்தில் மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிகளை உள்ளடக்கிய கல்குளம், விளவங் கோடு மற்றும் தோவாளை ஆகிய வட்டங்களில் ரப்பர் விவசாயம் பெருமளவில் மேற்கொள்ளப் படுகிறது. மாவட்டத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் ரப்பர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 50 ஆயிரம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்று வருகின்றனர்.

5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் தமிழக அரசின் நிறுவனமான ரப்பர் கழகம் உள்ளது. தற்போது ரப்பர் கழகத்தில் சுமார் 3 ஆயிரம் தொழிலாளர்கள் நிரந்தர தொழிலாளர்களாகவும், 1,000 தொழிலாளர்கள் தற்காலிக தொழிலாளர்களாகவும் பணி செய்து வருகின்றனர். கீரிப்பாறை மற்றும்

மைலாறு பகுதிகளில் இரண்டு பெரிய ரப்பர் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் 35 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகின்றன.

**3 ஆயிரம் டன் உற்பத்தி_**

குமரி மாவட்டத்தில் நாள் ஒன்றிற்கு உற்பத்தியாகும் 3 ஆயிரம் டன் ரப்பரை நாட்டிலுள்ள பல்வேறு தனியார் ரப்பர் ஆலைகள் கொள்முதல் செய்து வருகின்றன. தற்போது ரப்பர் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இந்நிலையில் ரப்பர் இறக்குமதி அதிகரிப்பால் ரப்பர் விவசாயிகள் மேலும் பாதிப்படைந்துள்ளனர்.

**விலை வீழ்ச்சி_**

இது குறித்து குமரி மாவட்ட சிஐடியு தோட்ட தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர் எம். வல்சகுமார் கூறியதாவது: கடந்த 2011-ம் ஆண்டு ஒரு கிலோ ரப்பர் ரூ. 250-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது கிலோ ரப்பர் ரூ. 91-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், அதற்கேற்ப டயர் விலை குறைக்கப்படவில்லை.

ரப்பர் விலை வீழ்ச்சிக்கு வெளிநாடுகளிலிருந்து ரப்பர் இறக்குமதி செய்வதுதான் முக்கிய காரணமாக உள்ளது.

இந்தியாவில் ஆண்டொன் றுக்கு 10 லட்சம் டன் ரப்பர் தேவைப்படுகிறது. கடந்த 2013-2014-ம் ஆண்டு நாட்டில் ஏழரை லட்சம் டன் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டது. 2014-2015-ம் ஆண்டில் ஆறரை லட்சம் டன் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டது. இதே ஆண்டில் மத்திய அரசு நான்கரை லட்சம் டன் ரப்பரை இறக்குமதி செய்தது. தேவைக்கும் அதிகமாக ரப்பரை இறக்குமதி செய்வதால் உள்நாட்டில் ரப்பரின் விலை தொடர் வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. இதனால் குமரி மாவட்டத்தில் ரப்பரை நம்பியுள்ள விவசாயிகள், தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, ரப்பர் இறக்குமதியை தடுப்பதற்கு மத்திய அரசுடன் தமிழக அரசு பேச்சு நடத்த வேண்டும். தமிழக அரசு ரப்பர் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஒரு கிலோ ரப்பருக்கு ரூ. 200 நிர்ணயித்து கொள்முதல்

செய்ய வேண்டும். தமிழக அரசு கனரக ரப்பர் ஆலையை விரைந்து குமரி மாவட்டத்தில் அமைக்க வேண்டும். பரளியாறில் செயல்பட்டு வரும் ரப்பர் வாரியத்தின் ரப்பர் ஆராய்ச்சி மையத்துக்கு மேலும் 100 ஏக்கர் நிலம் வழங்கி அந்த ஆராய்ச்சி மையத்தை விரிவுபடுத்த வேண்டும். இவ்வாறு எம்.வல்சகுமார் கூறினார்

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## மேட்டூர் அணை நீர்மட்டம் 84 அடியாக குறைந்தது



மேட்டூர், செப்.8–

காவிரி நீர் பிடிப்பு பகுதியில் மழை குறைந்ததால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை மேட்டூர் அணைக்கு 3 ஆயிரத்து 393 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 3 ஆயிரத்து 363 கனஅடியாக குறைந்தது. இன்று காலை இது 3 ஆயிரத்து 162 கன அடியாக குறைந்தது. அணையின் நீர்மட்டம் 85.17 அடியில் இருந்து 84.12 அடியாக குறைந்தது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கும் 15 அயிரத்து 800 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையில் இருந்து கடந்த மாதம் 9–ந் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்ட போது அணையின் நீர்மட்டம் 91 அடியாக இருந்தது. தற்போது 84.12 அடியாக உள்ளது. கடந்த 1 மாதத்தில் 12 அடி தண்ணீர் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாவூர்சத்திரத்தில் கோமாரி நோய் தடுப்பு முகாம்



பாவூர்சத்திரம், செப். 7 –

கீழப்பாவூர் யூனியனுக்குட்பட்ட திப்பனம்பட்டியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது முகாமிற்கு உதவி இயக்குனர் டாக்டர் ராமசாமி தலைமை தாங்கினார். மாவட்ட கவுன்சிலர் சேர்மபாண்டியன், யூனியன் துணைத்தலைவர் குணம் ஆகியோர் கோமாரி நோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வு உரையாற்றினர், முகாமில் 300 கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டது.

மருத்துவர்கள் நாகராஜன், கிருஷ்ணமணி, மருத்துவர் குழு தினேஷ், பழனி, சுப்பையா உள்ளிட்ட குழுவினர் கால்நடைகளுக்கு

சிகிச்சையளித்தனர். மேலும் வருகிற 21 –ந் தேதி வரை அனைத்து கிராமங்களிலும் இலவச தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது. இதனை பயன்படுத்தி தங்கள் கால்நடைகளை பரிசோதித்துக்கொள்ள கால்நடை பராமரிப்புத்துறை அறிவித்துள்ளது.